**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C  8108510

1. District : மாவட்டம் Coimbatore   PS: காவல்நிலையம் Vigilance and Anticorruption   Year: ஆண்டு 2021   FIR No.: மு.த.அ. எண் 17/2021   Date: நாள் 24.08.2021 1015 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption   Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of corruption (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: -
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 13.07.2021 11.00 hrs   Date to : நாள் வரை 23.08.2021 1300 hrs
Time Period : நேர அளவு -   Time from : நேரம் முதல் -   Time to : நேரம் வரை -
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.08.2021   Time : நேரம் 0945 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.08.2021   Time : நேரம் 0945 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 15 km East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Office of Civil Supply CID, Thannerpandal road, Peelamedu, Coimbatore
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. AYYAPPAN   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41 yrs   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் waste oil business   (g) Address : முகவரி F2, I floor, Krishnaleela Apartment, Balamurugan Nagar, Ganapathy, Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) HC 2487. V. Rajkumar, Office of Civil Supply CID, Peelamedu, Coimbatore
2) Tr. Santhosh, Police Constable, Office of Civil Supply CID, Peelamedu, Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

26.8.2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26/8/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் G. Arumugam
Rank: நிலை Inspector of Police No. எண் .........
V.S.Pl, Erode

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2021/AC/CB, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>

இன்று **24.08.2021** ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை **09.45** மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், கணபதி, பாலமுருகன் நகரில் உள்ள கிருஷ்ண லீலா அப்பார்ட்மெண்ட், கதவு எண். F2, முதல் மாடியில் வசிக்கும் கோபால் என்பவரது மகன் திரு.G.ஐயப்பன், வயது–41 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கோயம்புத்தூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி கொடுத்தார். அந்த புகாரில் சொல்லப்பட்ட கோவை சிவில் சப்ளை சி.ஐ.டி அலுவலகத்தில் பணிபுரியும் காவலர்களான திரு.V.ராஜ்குமார் மற்றும் திரு.சந்தோஷ் ஆகியோர்களின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டது போல் புகார்தாரரிடம் எதிரிகள் 1) திரு.V.ராஜ்குமார், தலைமை காவலர் **2487**, சிவில் சப்ளை சி.ஐ.டி, கோவை மற்றும் 2) திரு.சந்தோஷ், காவலர், சிவில் சப்ளை சி.ஐ.டி, கோவை ஆகியோர்கள் புகார்தாரர் இஞ்சின் கழிவு ஆயில் எடுத்து விற்பனை செய்யும் தொழில் செய்வதற்கு எந்தவொரு இடையூறு செய்யாமல் இருப்பதற்கும், பொய்யாக அரிசி கடத்தல் வழக்கு பதிவு செய்யாமல் இருக்க லஞ்சமாக பணம் ரூ.2,000/– கேட்டது தெரிய வருகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தை மற்றும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. அதன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று **24.08.2021** ம் தேதி காலை **10.15** மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2021/AC/CB u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018

ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் G.ஐயப்பன், வயது–41, த/பெ. கோபால், கிருஷ்ண லீலா அப்பார்ட்மெண்ட், கதவு எண்.F2, முதல் மாடி, பாலமுருகன் நகர், கணபதி, கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் தற்போது கோவை மாவட்டம், கணபதியில் உள்ள கிருஷ்ண லீலா அப்பார்ட்மெண்ட், கதவு எண். F2, முதல் மாடியில் எனது அம்மா மற்றும் பாட்டி ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். நான் 11 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணமாகவில்லை. நான் கடந்த 10 வருடமாக இன்ஜின் கழிவு ஆயில்களை கோவையில் உள்ள சிறு சிறு இருசக்கர மற்றும் நான்கு சக்கர ஓர்க்ஷாப்களில் இருந்து எடுத்து அதனை கட்டிட மற்றும் கட்டுமான தொழில் செய்யும் நபர்களுக்கு கட்டிட வேலைக்கு பயன்படுத்துவதற்காக விற்பனை செய்து வருகிறேன். மேற்படி கழிவு ஆயில்களை என்னுடைய அண்ணன் தண்டபாணி அவர்களுக்கு சொந்தமான மூன்று வீல் கொண்ட பஜாஜ் ஆட்டோ எண்.TN 38 BK 6743 ல் ஏற்றி கொண்டு தொழில் செய்து வருகிறேன். கடந்த ஜூலை மாதம் 2வது வாரத்தில் ஒரு நாள் மாலை சுமார் 5 மணிக்கு நான் கோவை பாலசுந்தரம் ரோட்டில் உள்ள வடக்கு மண்டல மாநகராட்சி அலுவலகத்திற்கு அருகில் உள்ள மகேஸ்வரி ஆட்டோ கேரேஜ்ல் கழிவு ஆயில் வாங்க ஓனர் ரவி அவர்களிடம் நின்று பேசிகொண்டிருந்தேன். அப்போது அந்த வழியாக போலீஸ் ஜீப்பில் வந்த பெண் அதிகாரி ஒருவர் எனது ஆட்டோவை பார்த்து இந்த ஆட்டோ யாருடையது என்று கேட்டார். அப்போது நான் அவரிடம் மேற்படி ஆட்டோ என்னுடையது என்று கூறினேன். அதற்கு அவர் நான் புட்செல் இன்ஸ்பெக்டர் என்று கூறி என்னை பற்றி கேட்க நான் என்னை பற்றியும் நான் செய்யும் தொழிலை பற்றியும் அவரிடம் கூறினேன். அதற்கு அவர் கழிவு ஆயில் எடுத்து விற்பனை செய்வதற்கு உன்னிடம் உரிமம் உள்ளதா என்று கேட்டார். நான் சிறிதளவு தான் கழிவு ஆயில்களை ஓர்க்ஷாப்களில் இருந்து வாங்கி கொண்டு கட்டிட மற்றும் கட்டுமான தொழில் செய்யும் நபர்களுக்கு மட்டும் விற்பனை செய்து வருகிறேன், என்னிடம் எந்தவொரு உரிமமும் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் இது போன்று கழிவு ஆயில்கள் எடுத்து விற்பனை செய்யும் தொழிலை உரிமம் இல்லாமல் செய்யக்கூடாது என்றும், உன் மீது கேஸ் போட்டு

உனது வண்டியை சீஸ் செய்து விடுவேன் என்று கூறி அருகில் இருந்த டிரைவரை என் வாகனத்தை பார்க்குமாறு சொன்னார். டிரைவரும் என் வாகனத்தை சோதனை செய்து பார்த்து அதில் காலி இன்ஜின் கழிவு கேன்கள் இருந்ததை சோதனை செய்து பார்த்து விட்டு, என்னுடைய முகவரி, செல் நெம்பர் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு, அவருடைய செல் எண்.6381404031 ல் இருந்து என்னுடைய செல் எண்.9566625230 க்கு மிஸ்டுகால் கொடுத்தார். என்னையும் மற்றும் எனது வாகனத்தையும் அவருடைய செல்போனில் போடோ எடுத்து கொண்டார். நான் அவரிடம் சார் உங்கள் பெயர் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் ராஜ்குமார் என்றும், இன்ஸ்பெக்டர் ஆரோக்கிய ஜான்ஸி அவர்களின் டிரைவர் என்று கூறினார். நானும் அந்த போன் நெம்பரை என்னுடைய செல்போனில் பதிவு செய்து வைத்துகொண்டேன். பின்னர் அங்கிருந்து புறப்படும் போது இன்ஸ்பெக்டர் என்னை பார்த்து 12.07.2021 ஆம் தேதி திங்கட்கிழமை புட்செல் அலுவலகத்திற்கு வந்து அவரை பார்க்குபடி கூறினார். நான் திங்கட்கிழமை என்னுடைய பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அன்று என்னால் புட்செல் அலுவலகத்திற்கு போக முடியவில்லை. அன்றைய தினம் ராஜ்குமார் அவர்கள் என்னுடைய செல்போனுக்கு அழைத்து ஏன் வரவில்லை என்று கேட்டார். நான் பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் மறுநாள் செவ்வாய்கிழமை வருகிறேன் என்று சொன்னேன். அவர் சரி என்று கூறி மறுநாள் வரும்படி கூறினார். மறுநாள் 13.07.2021 செவ்வாய்கிழமை சுமார் 11.00 மணிக்கு என்னுடைய அம்மா தனலட்சுமி அவர்களை அழைத்து கொண்டு பீளமேடு தண்ணீர் பந்தல் ரோட்டில் உள்ள புட்செல் அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது புட்செல் அலுவலக்த்தில் இருந்த ஒருவரிடம் இன்ஸ்பெக்டர் அம்மாவை பார்க்க வந்துள்ள விவரத்தை அவரிடம் கூறினேன். அப்போது அவர் உடனே நீ இன்ஜின் கழிவு ஆயில் விற்பனை செய்தவன் தானே உன் மீது இன்ஸ்பெக்டர் 100 கிலோ அரிசி கடத்தல் கேஸ் போடச்சொல்லியிருக்காங்க அதற்கு வக்கில் பீஸ் மற்றும் பைன் தொகை மொத்தம் ரூ.3,500/— ஆகும். ரெடி செய்துகொள் என்றார். உன் மீது மாதம் ஒரு கேஸ் போட்டுக்கொள்கிறோம். நீ கழிவு ஆயில் வாங்கி விற்றுக்கொள்ளலாம் என்றார். அப்போது அங்கே இருந்த மற்றொரு நபர் அவரை பார்த்து சந்தோஷ் என்று கூப்பிட்டார். அதிலிருந்து அவர் பெயர்

சந்தோஷ் என்று தெரிந்து கொண்டேன். மேலும் அங்கு என்னுடன் இருந்த என்னுடைய அம்மா சந்தோஷ் அவர்களிடம் என் மகன் மீது கேஸ் எதுவும் போடவேண்டாம் என்றும், அவர் திருமணமாகதவன், பெண் கிடைப்பது கஷ்டம் என்று அவரிடம் கூறினார். அதற்கு அவர் என் அம்மாவை பார்த்து நீங்கள் வெளியே கொஞ்சம் நில்லுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார். அந்தசமயம் ராஜ்குமார் அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு அருகில் உள்ள விஜய் பேக்கரிக்கு வந்து அவரை பார்க்க சொன்னார். பின்னர் வெளியே நின்றுகொண்டிருந்த என்னுடைய அம்மாவை அழைத்து கொண்டு புட்செல் அலுவலகத்திற்கு அருகில் உள்ள விஜய் பேக்கரிக்கு சென்று ராஜ்குமார் அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் கழிவு ஆயில் எடுத்து விற்பனை செய்யும் தொழில் செய்யக்கூடாது என்றும், மீறி செய்தால் உன் மீது அரிசி கடத்தரதாக கேஸ் போடுவதாக இன்ஸ்பெக்டர் சொல்லியுள்ளார். அதற்கு நான் கழிவு ஆயில்களை எடுத்து எந்தவொரு தப்பான தொழிலும் செய்ய வில்லை என்றும், கட்டிடம் கட்டும் தொழில் செய்வோருக்கு கட்டிட வேலைக்கு பயன்படுத்துவதற்காக மட்டுமே சப்ளை செய்து வருகிறேன் என்று அவரிடம் கூறினேன். அதற்கு அவர் இன்ஸ்பெக்டர் அம்மா உன் மீது கேஸ் போட சொல்லியுள்ளார் என்றும், அப்படி கேஸ் போடாமல் இருக்கவேண்டும் என்றால் தற்போது ரூ.2,000/– மும், மாதா மாதம் மாமூலாக ரூ.1,000/– ம் வசூல் செய்ய சொல்லியுள்ளார் என்றும் கூறினார். நான் அதற்கு தற்போது கொரோணா காலத்தில் தொழில் மிகவும் மோசமாக உள்ளதால் என்னால் இவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்றேன். அதற்கு அவர் மேற்படி பணம் எங்களுக்கு கொடுக்கவில்லை என்றால் உன்னை தொழில் செய்ய விடமாட்டோம் என்று மிரட்டினார். நானும் வேறு வழியில்லாமல் அவர் கேட்ட தொகையை இரண்டு நாட்களில் ரெடி செய்து கொடுத்து விடுகிறேன் என்று சொல்லி அங்கிருந்து எனது அம்மாவை அழைத்து கொண்டு வீட்டிற்கு சென்று வந்து விட்டேன். என்னால் பணம் ரெடி பண்ண முடியாததால் நான் 14.07.2021 ஆம் தேதி மாலை சுமார் 12.30 மணிக்கு நான் என்னுடைய செல் எண்.9566625230 இருந்து ராஜ்குமார் அவர்களது செல் எண்.6381404031 எண்ணிற்கு அழைத்து பணம் ரெடி செய்வதற்கு கொஞ்சம் டைம் வேண்டும் என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் பணம் உடனே ரெடி செய்யவில்லை

என்றால் உன் மீது அரிசி கடத்தியதாக பொய் கேஸ் போட்டு விடுவோம் என்று கறாராக கூறி போனை கட்செய்து விட்டார். இதனால் நான் பயந்து போய் அன்றைய தினம் மாலை மீண்டும் புட்செல் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு சந்தோஷ் என்ற காவலர் என்னை பார்த்து என்னடா ரூ.2,000/– கொண்டு வந்தியா என்று கேட்டார். நான் ரூ.1,500/– மட்டும் கொண்டு வந்துள்ளதாக கூறினேன். அதற்கு அவர் உனக்கு ஏத்த ராஜ்குமார் வந்தாள்தான் நீ ரூ.2,000/– கொண்டுவந்து கொடுப்பாய் என்று சொன்னார். அப்போது அங்கு அலுவலகத்திற்குள் நுழைந்த இன்ஸ்பெக்டர் ஆரோக்கிய ஜான்சி அங்கிருந்த சந்தோஷ் காவலரிடம் என்னை காண்பித்து இவர் மீது வழக்கு போட்டாச்சா என்று கேட்டுகொண்டு ரூம்க்குள் சென்றார். அப்போது இன்ஸ்பெக்டரை தொடர்ந்து அங்கு வந்த டிரைவர் ராஜ்குமார் அவர்கள் என்னிடம் ஏன்டா பணம் ரூ.2,000/– கொண்டு வந்தியா என்று கேட்டார். நான் என்னிடம் ரூ.1,500/– மட்டும் உள்ளது என்று கூறினேன். அதற்கு அவர் உனக்கு அறிவில்லையா, கேஸ் போடாமல் உன்னை விட்டதற்கு உனக்கு ரொம்ப ஓவரா போச்சு, நீ ரூ.2000/– கொடுக்கவில்லை என்றால் எப்படி தொழில் செய்யபோகிறாய் என்று பார்ப்போம். உடனே வெளியே போடா என்று காட்டமாக கூறினார். நானும் பயந்து போய் அங்கிருந்து கிளம்பி வந்து விட்டேன். பின்னர் 12.08.2021 ஆம் தேதி என்னை மீண்டும் ராஜ்குமார் எனது செல்போன் நம்பருக்கு அழைத்து பணம் ரூ.2,000/– ம் ரெடி செய்து விட்டாயா என்று கேட்டார். அதற்கு நான் பணம் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் ரெடி செய்து விடுவேன் என்றும், மாதம் மாதம் கொடுக்கும் பணம் மட்டும் இன்ஸ்பெக்டர் அம்மாவிடம் சொல்லி கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் முதலில் இந்த பணம் ரூ.2,000/– ஐ ரெடி செய்து விட்டு போனில் அழைக்கும்படி கூறி போனை வைத்து விட்டார். ஆனால் என்னால் அவர் கேட்கும் பணம் ரூ.2,000/– ரெடி செய்ய முடியாததால் அவருக்கு போன் செய்யவில்லை. நேற்று 23.08.2021 ஆம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு எனது செல் எண்.6381404031 க்கு செல் எண்.8810851077 லிருந்து போன் வந்தது. நான் அட்டன் செய்து பேசிய போது, தான் ராஜ்குமார் புட்செல் போலீஸ் என்று சொல்லும் போது போன் கட்டாகிவிட்டது, இதனால் நான் திருப்பி அந்த எண்ணிற்கு கூப்பிட்டேன். அப்போது ராஜ்குமார் அவர்கள்

என்னிடம் பணம் ரூ.2000/– கொடுக்க சொல்லி எவ்வளவு நாள் ஆகிவிட்டது ஏன் இன்னும் கொடுக்கவில்லை உன் மீது அரிசி கடத்தரதாக ரிப்போர்ட் எழுதி கேஸ்போட சொன்னால் தான் சரியாக இருக்கும் என்று மிரட்டினார். அதற்கு நான் தற்போது ஆயில் தொழில் ரொம்ப டல்லா இருந்தது நாளதான் பணம் ரெடி செய்யமுடியாம இருந்தது என்று சொன்னேன். அதற்கு அவர் நாளைக்கு கண்டிபாக பணம் ரெடி செய்து விட்டு என்னை இன்று போனில் அவரை அழைக்குபடி கூறினார். நான் யோசனை செய்து பார்த்ததில் நான் முறையாக செய்யும் தொழிலுக்கு புட்செல் போலீஸ் ராஜ்குமார் மற்றும் சந்தோஷ் ஆகியோர் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.2,000/– மற்றும் மாதா மாதம் மாமூலாக கேட்கும் பணம் ரூ.1000/– ஐ அவர்களுக்கு கொடுக்க விருப்பம் இல்லை. எனவே தற்போது லஞ்சமாக பணம் ரூ.2,000/– கேட்கும் கோவை புட்செல் போலீஸ் ராஜ்குமார் மற்றும் சந்தோஷ் ஆகியோர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (G.ஐயப்பன், 24/08/2021) இடம் – கோவை, தேதி – 24.08.2021. இடம் – கோவை, நாள் – 24.08.2021. Sir, Received the complaint on 24/08/2021 at 09.45 hrs. Sd/- x-x-x-x 24.08.2021 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting discreet enquiry, registered a case in Coimbatore V&AC Cr.No.17/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 by me on 24.08.2021 at 10.15 hrs. Sd/- x-x-x-x 24/08/2021 (G.Arumugam), Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

24/8/2021

(G.ஆறுமுகம்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.